# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# செலக்சன்

7

தமிழ்

Padasalai

அன்பு நிலையம்
மதுரை – 625001

விலை ₹ 50.00

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்

## ஏழாம் வகுப்பு

## 7 மூன்றாம் பருவம்

## தமிழ்

✆ 94430 43338
✆ 94430 46662

வெளியிடுபவர்
**அன்பு நிலையம்**
15, புதுமண்டபம், மதுரை-625001.

## பொருளடக்கம்



| பா.எண் | பொருண்மை/ இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 2 |
| 1. | நாகரிகம் | 1.1 விருந்தோம்பல்* | 3 |
| | தொழில் | 1.2 வயலும் வாழ்வும் | 5 |
| | வணிகம் | 1.3 திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 9 |
| | நயத்தகு | 1.4 திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 13 |
| | நாகரிகம் | 1.5 அணி இலக்கணம் | 15 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 16 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 19 |
| 2 | அறம், | 2.1 புதுமை விளக்கு * | 22 |
| | தத்துவம், | 2.2 அறம் என்னும் கதிர் * | 25 |
| | சிந்தனை | 2.3 ஒப்புரவு நெறி | 27 |
| | | 2.4 உண்மை ஒளி | 30 |
| | ஒப்புரவு | 2.5 அணி இலக்கணம் | 32 |
| | ஒழுகு | 2.6 மொழியை ஆள்வோம் | 33 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 35 |
| | | 2.8 திருக்குறள் * | 37 |
| 3 | | 3.1 மலைப் பொழிவு | 40 |
| | மனிதம், | 3.2 தன்னை அறிதல் | 43 |
| | ஆளுமை | 3.3 கண்ணியமிகு தலைவர் | 45 |
| | | 3.4 பயணம் | 47 |
| | மானுடம் | 3.5 ஆகுபெயர் | 49 |
| | வெல்லும் | 3.6 மொழியை ஆள்வோம் | 51 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 54 |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## 7. தமிழ்

### மனப்பாடப்பகுதி

**விருந்தோம்பல்**

*மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்*
*பாரி மடமகள் பாண்மகற்கு – நீர் உலையுள்*
*பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்*
*ஒன்றாகு முன்றிலோ இல்*

**– முன்றுரை அரையனார்**

**புதுமை விளக்கு**

*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய*
*சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை*
*இடர் ஆழி நீங்குகவே என்று*

**– பொய்கை ஆழ்வார்**

**அறம் என்னும் கதிர்**

*இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக*
*வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி*
*அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்*
*பைங்கூழ் சிறுகாலைச் செய்*

**– முனைப்பாடியார்**

**திருக்குறள்**

*1. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்*
*யானையால் யானையாத் தற்று*

*2. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு.*

*3. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

**– திருக்குறள்**

**மலைப்பொழிவு**

*வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்*
*வாழ்க்கை பாலை வனம் – அவர்*
*தூய மனத்தில் வாழ நினைத்தால்*
*எல்லாம் சோலைவனம் !*

*தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்*
*சண்டை சச்சரவு – தினம்*
*தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்*
*பேசும் பொய்யுறவு !*

*இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி*
*எத்தனை வீண்கனவு – தினம்*
*இவை இல்லாது அமைதிகள் செய்தால்*
*இதயம் மலையளவு !*

**– கண்ணதாசன்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று

# 1. நயத்தகு நாகரிகம்

கவிதைப் பேழை

இயல் ஒன்று

## 1.1. விருந்தோம்பல்

மனவரைபடம்

**விருந்தோம்பல்**

ஆசிரியர் → முன்றுறை அரையனார்
காலம் → கி.பி.(பொ.ஆ) 4 ஆம் நூற்றாண்டு
நூல் → பழமொழி
சமயம் → சமணசமயத்தவர்
பழமொழி → பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
நானூறு
பாடல்கள் → நானூறு
சிறப்பு → ஒவ்வொரு பாடலிலும் ஒருபழமொழி உள்ளது.

தமிழர்களின் பண்பாடு
↓
விருந்தோம்பல்
↓
பாரிவள்ளல்
↓
பாரிமகளிர்
அங்கவை, சங்கவை
↓
புதுமையான உணவு
↓
பொன் கொடுத்தல்

---

**மதிப்பீடு**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மரம் வளர்த்தால்...................பெறலாம்.

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி விடை : ஆ) மாரி

2. "நீருலையில்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...........

அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்
இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில் விடை : இ) நீர் + உலையில்

3. மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.......

அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று
இ) மாரியின்று ஈ) மாரியன்று விடை : அ) மாரியொன்று

---

**குறுவினா**

1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.

பாரிமகளிரின் பெயர்கள்: 1. அங்கவை, 2.சங்கவை.

---

2. " பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை " – எவ்வாறு ?

* பாரிமகளிர், இரந்து நின்ற பாணர்களுக்கு உலைநீரில் பொன்இட்டு கொடுத்தனர்.
* அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிந்தனை வினா**

**தமிழர்களின் பிறபண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

| | |
|---|---|
| 1. விருந்தோம்பல் | 5. ஈகை |
| 2. காதல் | 6. கொடை |
| 3. வீரம் | 7. கற்புடைமை |
| 4. நட்பு | 8. உலக ஒருமைப்பாடு |

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாரி என்பதைக் குறிக்கும் சொல்.........**

**அ) மலை ஆ) மழை இ) கலை ஈ) தலை விடை : ஆ) மழை**

**2. வறண்டிருந்த என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்.........**

**அ) வறண் + டிருந்த ஆ) வறண்டி + ருந்த**

**இ) வறண்டு + இருந்த ஈ) வறண்டு + ஈருந்த விடை : இ) வறண்டு + இருந்த**

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1. புகவா | – | இளமகள் |
| 2. மடமகள் | – | கொடுத்தாள் |
| 3. நல்கினான் | – | திண்ணை |
| 4. முன்றில் | – | உணவாக |

**விடைகள் :–**

| | | |
|---|---|---|
| 1. புகவா | – | உணவாக |
| 2. மடமகள் | – | இளமகள் |
| 3. நல்கினான் | – | கொடுத்தாள் |
| 4. முன்றில் | – | திண்ணை |

**முன்றுறை அரையனார் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| பெயர் | – | முன்றுறை அரையனார் |
| காலம் | – | பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு |
| சமயம் | – | சமண சமயத்தவர் |
| நூல் | – | பழமொழி நானூறு |
| சிறப்பு | – | ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை இடம் பெறச் செய்துள்ளார். |

**பழமொழி நானூறு நூற்குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | – | பழமொழி நானூறு |
| பகுதி | – | பதினெண் கீழ்க்கணக்கு |
| ஆசிரியர் | – | முன்றுறை அரையனார் |
| பாடல்கள் | – | நானூறு பாடல்கள் |
| சிறப்பு | – | ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் பழமொழி நானூறு எனப் பெயர் பெற்றது. |

## கற்பவை கற்றபின்

**1. வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. பேகன் | 2. பாரி | 3. எழினி | |
| 4. ஆய் | 5. அதியமான் | 6. நள்ளி | 7. ஓரி |

**2. விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**

**புறாவும் விருந்தோம்பலும்**

அயர்னாபுரம் என்ற ஊரில் அருகே பெரிய காடு இருந்தது. அந்த காட்டில் கொடிய வேடன் ஒருவன் வசித்தான். ஒரு நாள் காட்டில் பெரும்புயல் அடித்தது. பயங்கர மழையும் பெய்தது. இடியும் மின்னலும் பயங்கரமாக இருந்தது. காடு எங்கும் பெருவெள்ளம் நிறைந்திருந்தது அந்தக் காட்டில் பாதை தெரியாமல் குளிரில் நடுங்கிய படியே வேடன் ஒருவன் நடந்து கொண்டிருந்தான். மழையிலும் புயலிலும் அடிபட்டு ஒரு பெண் புறா தண்ணீரில் விழுந்து கிடந்தது. பாவம் அது குளிரில் நடுங்கி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. வேடன் அந்த புறாவை கண்டுவிட்டான். அதை எடுத்து தன் பைக்குள் போட்டுக் கொண்டு ஒரு மரத்தடியில் வந்து அமர்ந்தான்.

அந்த மரத்தில் ஒரு ஜோடி புறாக்கள் வெகு நாட்களாக குடும்பம் நடத்தி வந்தது. அப்போது மரத்தில் ஆண்புறா மட்டுமே இருந்தது. இரை தேடி வெளியே பறந்து சென்ற பெண்புறா இன்னும் திரும்பி வரவில்லை எனவே, ஆண்புறா கவலையுடன் தன் மனைவியான பெண் புறாவைத் தேடிக் கொண்டிருந்தது.

பெண் புறாவோ வேடனிடம் அகப்பட்டுக் கொண்டது. அது மரத்தடியில் அமர்ந்திருந்த வேடனின் பைக்குள் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது. ஆண்புறா அழுது கண்ணீர் வடிப்பதை அது கேட்டு மனம் குமுறியது.

அய்யோ என் அருமைக் கணவரே....நான் வேடனிடம் சிக்கிக் கொண்டுள்ளேன் என்னை நினைத்து புலம்ப வேண்டாம். செயலாலும் எண்ணத்தாலும் நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். நாம் அன்புடன் வாழ்ந்த மரத்தடியில் இந்த வேடன் தஞ்சமாக வந்துள்ளான். அவன் எத்தகைய கொடியவன். இவன் குளிரால் தவிக்கிறான். பசியால் வாடிக் கொண்டிருக்கிறான். இவனுக்கு உதவுங்கள். நான் இறந்தாலும் வேறு ஒரு பெண் புறாவை மனைவியாக்கி கொள்ளுங்கள் என்று தன் கணவரிடம் பெண் புறா கூவியது.

இதைக் கேட்ட ஆண் புறா வேடன் அருகே வந்தது. வேடன் குளிரால் நடுங்கி வெடவெடத்துக் கொண்டிருந்தான். ஆண்புறா வேடனை அன்புடன் உபசரித்து, வேடனே உனக்கு என்ன தேவை. கூச்சப்படாமல் என்னிடம் சொல். பகைவன் ஆனாலும் வீட்டுக்கு வந்துவிட்டால் அவனை உபசரித்து மகிழ்வது எங்கள் வழக்கம் என்றது.

ஏ ஆண் புறாவே நான் வேடன் (உங்கள் பகைவன்) எனக்கு நீ உதவ முன் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அன்புள்ள ஆண் புறாவே என்னால் குளிரையும், பசியையும் தாங்கமுடியவில்லை. முடிந்தால் உதவி செய் என்றான்.

ஆண் புறா மரத்தில் கட்டியிருந்த கூட்டைப் பிரித்து நெருப்பு மூட்டியது. வேடனின் குளிரைப் போக்கிய ஆண் புறா மேலும் நெருப்பை அதிகரித்து அதில் தான் விழுந்து வேடரே எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவே என்னையே உனக்கு உணவாகத் தருகிறேன் என்று கூறி நெருப்பில் விழுந்து இறந்தது. வேடன் இதைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தான். புறாவின் விருந்தோம்பல் அவனை திகைப்படைய வைத்தது.

இவ்வளவு அருமையான புறாக்களை பத்தியற்றவனான நான் வேட்டையாடியிருக்கேனே என நினைத்து வருந்தினான். வேடன் பெண் புறாவை விடுதலை செய்தான் பெண் புறா கணவனின் தியாகத்தை எண்ணி மகிழ்ந்தது. பின் தானும் தீயில் விழுந்து இறந்தது. தன் தவறை எண்ணி மனவருந்திய வேடன் அன்று முதல் வேட்டையாடும் தொழிலை விட்டுவிட்டான்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

கவிதைப்பேழை

**இயல் இரண்டு**

## 2.2. அறம் என்னும் கதிர்

**மனவரைபடம்**

**அறம் என்னும் கதிர்**

| | | |
|---|---|---|
| இன்சொல் | ⟷ | விளைநிலம் |
| ஈதல் | ⟷ | வித்து |
| வன்சொல் | ⟷ | களை |
| வாய்மை | ⟷ | எரு (உரம்) |
| அன்பு | ⟷ | நீர் |
| அறம் | ⟷ | கதிர் |

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காந்தியடிகள் எப்போதும்................ப் பேசினார்**

அ) வன்சொற்களை ஆ) அரசியலை

இ) கதைகளை ஈ) வாய்மையை **விடை : ஈ) வாய்மையை**

**2. " இன்சொல் " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.......**

அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல்

இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல் **விடை : இ) இனிமை + சொல்**

**3. அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்..............**

அ) அற கதிர் ஆ) அறுகதிர்

இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர் **விடை : இ) அறக்கதிர்**

**4. " இளமை " என்னும் சொல்லின் எதிர்ச்சொல்..............**

அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை **விடை : அ) முதுமை**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **1. விளைநிலம்** | – | **உண்மை** |
| **2. விதை** | – | **இன்சொல்** |
| **3. களை** | – | **ஈகை** |
| **4. உரம்** | – | **வன்சொல்** |

**விடைகள்.**

| | | |
|---|---|---|
| 1. விளைநிலம் | – | இன்சொல் |
| 2. விதை | – | ஈகை |
| 3. களை | – | வன்சொல் |
| 4. உரம் | – | உண்மை |

**குறுவினா**

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார் ?**

அறக்கதிர் விளைய உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

**2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது ?**

நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் வன்சொல்லை குறிப்பிடுகிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா**

**இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை ?**

**இளம் வயதிலேயே செய்யவேண்டியன ;**

1. இனிய சொல்லை விளைநிலமாக்கி
2. ஈகை என்னும் பண்பை விதையாக விதைத்து
3. வன்சொல் என்னும் களையை நீக்கி
4. உண்மை பேசுதல் என்னும் எருவினை இட்டு.
5. அன்பை நீராக பாய்ச்சி
6. அறம் என்னும் கதிரைப் பயனாகப் பெறவேண்டும்.

---

**சிந்தனை வினா**

**இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள் ?**

**இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் :**

* பெரியோருக்கு கீழ்படிதல்.
* ஆசிரியர் கூறுவதைக் கேட்டு நடத்தல்.
* சிறுசேமிப்பினை மேற்கொள்ளல்.
* உண்மை பேசுதல்.
* பிறர்க்கு உதவி செய்தல்.
* தினமும் வீட்டுப்பாடங்களை செய்தல்.
* உடலை சுத்தமாக வைத்திருத்தல்.
* அனைவரிடமும் அன்பாக நடத்தல்.

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வித்து என்பதன் பொருள்**

அ) எரு ஆ) களை
இ) நீர் ஈ) விதை **விடை : ஈ) விதை**

**2. ஈன என்பதன் பொருள்**

அ) பெற ஆ) நிலம் இ) முதுமை ஈ) விதை **விடை : அ) பெற**

**3. அறநெறிச்சாரத்தில் உள்ள பாடல்களின்**

அ) 226 ஆ) 225 இ) 218 ஈ) 214 **விடை : ஆ) 225**

---

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **1. நிலன்** | **–** | **பசுமையான பயிர்** |
| **2. களை** | **–** | **கடுஞ்சொல்** |
| **3. பைங்கூழ்** | **–** | **நிலம்** |
| **4. வன்சொல்** | **–** | **வேண்டாத செடி** |

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. நிலன் | – | நிலம் |
| 2. களை | – | வேண்டாத செடி |
| 3. பைங்கூழ் | – | பசுமையான பயிர் |
| 4. வன்சொல் | – | கடுஞ்சொல் |

---

**முனைப்பாடியார் குறிப்பு தருக.**

| | |
|---|---|
| ஆசிரியர் பெயர் | : முனைப்பாடியார் |
| பிறந்த ஊர் | : திருமுனைப்பாடி |
| காலம் | : 13ம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல் | : அறநெறிச்சாரம் |
| சமயம் | : சமணம் |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**கற்பவை கற்றபின்**

**1. பிறருடன் பேசும்போது நீங்கள் பயன்படுத்தும் இன்சொற்களைத் தொகுத்துக் கூறுக.**

**பிறருடன் பேசும் போது நாங்கள் பயன்படுத்தும் இன்சொற்கள் :–**

* நன்றி
* மகிழ்ச்சி
* சிறப்பு
* பரவாயில்லை
* பொறுத்துக்கொள்
* கவனமாகப்படி
* உண்மை
* நன்மை
* வெற்றி
* கடமை
* கண்ணியம்
* கட்டுப்பாடு
* பொறுமை

---

**2. உன் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நீ மகிழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறுக.**

ஒரு நாள் நானும் என் அன்புத் தாயும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தோம் அப்பொழுது வாகனங்கள் அதிகமாக வந்தும் சென்றும் கொண்டிருந்தது. நாங்கள் செல்லும் வழியில் ஒரு கண் தெரியாத ஒருவர் சாலையினை கடக்க முடியாமல் நின்று கொண்டிருந்தார். அவரைக் கடந்து எண்ணற்ற மக்கள் சென்று கொண்டிருந்தனர். நான் என் அம்மாவிடம் கண் தெரியாதவரை சாலையை கடக்க வைக்கவா என்று கேட்டேன் அம்மா அதற்கு சரி என்றார். நான் அந்த கண் தெரியாதவரை சாலையினை கடக்க உதவி செய்தேன் அதற்கு என் அம்மா என் நல்ல மனதைப் பாராட்டி சிறப்பு, அன்புள்ள மனம் என்று கூறி என்னை புகழ்ந்தார்.

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உரைநடை உலகம்

இயல் மூன்று

## 3.3. கண்ணியமிகு தலைவர்

### கண்ணியமிகு தலைவர்

பெயர் : காயிதேமில்லத்
இயற்பெயர் : முகம்மது இசுமாயில்
பிறப்பு : 5.06.1896 – 4.04.1972
ஊர் : திருநெல்வேலி

↓
எளிமையின் சிகரம்
↓
ஆடம்பரமில்லா திருமணம்
↓
நேர்மை
↓
மொழிக்கொள்கை
↓
நாட்டுப்பற்று
↓
அரசியல் பொறுப்புகள்
↓
கல்விப்பணி
↓
தொழில்துறை

---

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காயிதேமில்லத்.................பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.**

அ) தன்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை **விடை : ஆ) எளிமை**

**2.காயிதே மில்லத் என்னும் அரபுச் சொல்லுக்குச்.............என்பது பொருள்.**

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி
இ) சிந்தனையாளர் ஈ)சட்ட வல்லுநர் **விடை : ஆ) சமுதாய வழிகாட்டி**

**3. விடுதலைப் போராட்டத்தின்போது காயிதேமில்லத் .................இயக்கத்தில் கலந்துகொண்டார்.**

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக் காய்ச்சும்
இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை
**விடை : ஈ) ஒத்துழையாமை**

**4. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம்..................**

அ)சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம்
இ) ஊராட்சிமன்றம் ஈ) நகர் மன்றம் **விடை : ஆ) நாடாளுமன்றம்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**5. " எதிரொலித்தது " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.................**

அ) எதிர் + ரொலித்து ஆ) எதில் + ஒலித்தது

இ) எதிர் + ஒலித்தது ஈ) எதி + ரொலித்து **விடை : இ) எதிர் + ஒலித்தது**

**6. முதுமை+மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்................**

அ) முதுமொழி ஆ) முதுமைமொழி

இ) முதியமொழி ஈ) முதல்மொழி **விடை : அ) முதுமொழி**

---

**குறுவினா**

**1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.**

காயிதே மில்லத் தமது கல்வியை விட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.

---

**2. காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.**

காயிதே மில்லத் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் தம் மகனின் திருமணத்தை நடத்தி முடித்தார்.

---

**சிறுவினா**

**ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.**

1. இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.
2. சிலர் மிகுதியான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும் சிலர். பழமையான மொழியைத் தான் ஆட்சிமொழியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்றனர்.
3. காயிதே மில்லத் அவர்கள் பழமையான மொழி தமிழ்தான் என்று உறுதியாக கூறினார்.
4. திராவிடமொழியான தமிழே மிகவும் இலக்கியச் செறிவும் மிக பழமையுமானதும் என்றார்.
5. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

---

**சிந்தனை வினா**

**நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள் ?**

1. கிராமங்களைதத்தெடுத்தல்
2. சாலைகள் கட்டுமானம் மற்றும் சீர் செய்தல்
3. மரம் வளர்ப்பு
4. கல்வி வளர்ச்சியை மேம்படுத்துதல்
5. நெகிழி ஒழிப்பு
6. போக்குவரத்தை கட்டுப்படுத்தல்

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காயிதே மில்லத் போன்ற தலைவர் கிடைப்பது அரிது என்று கூறியவர்.......**

அ) காமராசர் ஆ) அண்ணா இ) பெரியார் ஈ) கலைஞர் **விடை : இ) பெரியார்**

**2. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போர் மூண்ட ஆண்டு...............**

அ) 1862 ஆ) 1962 இ) 1972 ஈ) 1967 **விடை : ஆ) 1962**

**3. " கண்ணியமிகு " என்று அடைமொழியால் அழைக்கப்படுபவர்..................**

அ) பெரியார் ஆ) அண்ணா

இ) வ.உ.சி. ஈ) காயிதே மில்லத் **விடை :ஈ) காயிதே மில்லத்**

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா**

**1. காயிதே மில்லத் அவர்களின் கல்விப்பணி பற்றி குறிப்பிடுக.**

* காயிதே மில்லத் கல்வி ஒன்று தான் ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எண்ணினார்.

* திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

---

**சிறுவினா**

**1. காயிதே மில்லத் தின் அரசியல் பொறுப்புகள் குறித்து எழுதுக.**

* காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.

* இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார்.

* இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

---

**கற்பவை கற்றபின்**

**எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்த பிற தலைவர்கள் குறித்து வகுப்பறையில் பேசுக.**

**பெருந்தலைவர் காமராசர்:**

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ம் தேதி காமராசர் தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றார். 1954 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டுவரை முதல்வராக பணியாற்றிய காமராசர் எளிமையின் சின்னமாக விளங்கினார்.

**மகாத்மா காந்தியடிகள் :**

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் காந்தியடிகள் என்பது உலகறிந்த செய்தி. ஒருமுறை தம் மனைவி கஸ்தூரிபாய் காந்தி ஆசிரமத்திற்கு வாங்கிய காய்கறிகளில், வழக்கத்திற்கு அதிகமாக ஓர் அணா செலவு செய்ததற்குக் காந்தியடிகள் கடிந்து கொண்டார். ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து அனைவருக்கும் கொடுத்தார் காந்தியடிகள் விரும்பியிருந்தால் அரச வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம் அதற்கு இடம் தரவில்லை.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள் :

3 முதல் 10
வகுப்பு வரை

தமிழ்
ஆங்கிலம்
கணக்கு ( TM & EM)
அறிவியல் ( TM & EM)
சமூக அறிவியல் ( TM & EM)

அன்பு நிலையம்
மதுரை – 625001

CONTACT:
94430 43338
94430 46662

Padasalai